திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி, தென் மதராஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷனை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா ? இந்த அனல் மின்சாரத்திற்குத் தேவையான பொருள்கள் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றனவா ? அல்லது வேறு நாடுகளிலிருந்து வரவழைக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியாரிடத்திலிருக்கும் மின்சார நிறுவனங்களை மெல்ல மெல்ல எடுத்துக்கொள்ளுவது என்ற திட்டம்தான். படிப்படியாக இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் மூன்று நிறுவனங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதுபற்றிய நிலைமை களெல்லாம் முடிந்ததற்குப் பிறகு, படிப்படியாக வரும்போது, திருச்சி போன்ற மற்றவைகளையும் எடுத்துக் கொள்ளுவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது தஞ்சையில் இருக்கும் நிறுவனங்களை எடுத்துக்கொள்ளுகிற சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றியும் இப்பொழுது "ரிட்"-க்குப் போயிருக்கிறார்கள். அதுபற்றி முடிவு தெரிந்ததற்குப் பிறகு, அதற்கான நடவடிக்கைகளில் நாம் முற்பட வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 154, 155 எண்களுள்ள வினாக்கள் தள்ளி வைக்கப்படுகின்றன. இப்பொழுது 156 எண்ணுள்ள வினா எடுத்துக்கொள்ளப்படும்.

வேளாண்மைத்துறை அதிகாரிகள்

*156 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய இலாகாவில் சொந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அதே மாவட்டத்தில் கெஜட் பதிவுள்ள அதிகாரிகளாக நியமிக்கப்படக் கூடாது என அரசாங்கம் விவசாய நெறியாளருக்கு ஏதேனும் உத்தரவு பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் என்றால் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

மகளிர் கூட்டுறவு பண்டகசாலைகள்

*157 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டக் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜ்யத்தில் எத்தனை மகளிர் கூட்டுறவு பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன ?

(இ) மேலும் மகளிர் கூட்டுறவு பண்டகசாலையை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசினரின் பரிசீலனையிலுள்ளதா ?

(உ) ஆமெனில், அவைகளுள் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை இடம் பெறும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இருபத்தாறு.

(இ) இல்லை—எந்தப்பகுதியிலும் மகளிர் கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் பண்டகசாலையை ஆரம்பிக்க முன்வந்தால் இதுபற்றிக் கூட்டுறவு பதிவாளர்கள் கவனிப்பார்கள்.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.